செய்தி எண்: 04 நாள்: 01.11.2017

## மாவட்ட தொழில் மையத்தின் முத்தான மூன்று திட்டங்கள்

## பயன்பெற்று தொழிலதிபராகுங்கள் !

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஜெ. இன்னசென்ட். திவ்யா,இ.ஆ.ப. அவர்கள் அழைப்பு !!

சுயவேலை வாய்ப்பை உருவாக்கும் நீட்ஸ் யு.ஒய்.ஈ.ஜி.பி மற்றும் பி.எம்.ஈ.ஜி.பி ஆகிய முத்தான மூன்று திட்டங்கள் மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் விண்ணப்பித்து பயன்பெறும்பொருட்டு **தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம் மற்றும் கடன் மேளா, ஊட்டி, ரோஸ் கார்டன் அலுவலகத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் 06.11.2017 திங்கட்கிழமை அன்று மதியம் 2 மணியளவில் நடைபெற உள்ளது.** இத்திட்டங்களில் விண்ணப்பிக்க தகுதிகள் மற்றும் திட்ட விபரங்கள் பின்வருமாறு :

**1. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் - ("நீட்ஸ் ") :**

**தகுதிகள் :** தொழில் முனைவோர் முதல் தலைமுறை மற்றும் புதிய தொழில் முனைவோராக இருக்க வேண்டும். கல்வித் தகுதியாக பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, ஐடிஐ மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனத்தின் மூலம் தொழில் பயிற்சி இவற்றில் ஒன்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்த திட்டத்தில் விண்ணப்பிப்பவர்கள் 21 வயது பூர்த்தியடைந்து இருக்க வேண்டும். பொதுப்பிரிவினருக்கு அதிகபட்ச வயது 35, மகளிர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் திருநங்கைகள் உள்ளிட்ட சிறப்பு பிரிவினருக்கு 45 வயது அதிக பட்சமாக இருக்க வேண்டும்.

**"திட்ட மதிப்பீடு மற்றும் மானியம்" :**

இத்திட்டத்தில் ரூ.5 இலட்சம் முதல் ரூ.1 கோடி வரை திட்ட மதிப்பீட்டு தொகை உள்ள உற்பத்தி மற்றும் சேவை தொழில்களை தொடங்கலாம். இதற்கு தமிழக அரசு சார்பில் 25 விழுக்காடு மானியமும், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. தொழில் முனைவோர் **www.msmeonline.tn.gov.in/needs** என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்கலாம்.

.. 2 ..

2."வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

(யு.ஒய்.ஈ.ஜி.பி)"

**தகுதிகள் :** எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 18 வயது பூர்த்தியடைந்து இருக்க வேண்டும். பொதுப்பிரிவினருக்கு அதிகபட்ச வயதாக 35 மற்றும் சிறப்பு பிரிவினருக்கு 45 வயதுக்குள் இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,50,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3 வருடங்களுக்கு குறையாமல் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும்.

**"திட்ட மதிப்பீடு மற்றும் மானியம்" :**

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி தொழில்களை அதிக பட்சம் ரூ.10 லட்சம் முதலீட்டிலும், சேவை தொழில்களை அதிகபட்சம் ரூ.3 லட்சம் முதலீட்டிலும், வியாபாரத் தொழில்களை அதிகபட்சம் ரூ.1 லட்சம் முதலீட்டிலும் தொடங்க இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். இதற்கு தமிழக அரசு சார்பில் 25 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.1.25 லட்சம் வரை வழங்கப்படும். **www.msmeonline.tn.gov.in/uyegp** என்ற இணையதள முகவரியில் தொழில் முனைவோர் விண்ணப்பிக்க வேண்டும்.

3. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ("பி.எம்.ஈ.ஜி.பி")

இத்திட்டத்தில் உற்பத்தி பிரிவில் ரூ.10 லட்சம் வரையிலான தொழில்களை துவங்கவும், சேவைப்பிரிவில் ரூ.5 லட்சம் வரையிலான தொழில்களை துவங்கவும் வழிவகை உள்ளன. கல்வி தகுதி எதுமில்லை. இவற்றுக்கு மேற்பட்டு ரூ.25 இலட்சம் வரை முதலீட்டில் தொழில் துவங்க குறைந்த பட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பில்லை.

நகர்ப்புறங்களில் தொழில் துவங்கும் பொதுப்பிரிவு மனுதாரர்களுக்கு 15 விழுக்காடு மானியமும், சிறப்பு பிரிவினருக்கு 25 விழுக்காடு மானியமும், கிராமப்புறங்களில் தொழில் துவங்கும் பொதுப்பிரிவு மனுதாரர்களுக்கு 25 விழுக்காடு மானியமும், சிறப்பு பிரிவினருக்கு 35 விழுக்காடு மானியமும் அளிக்கப்படுகிறது. தொழில் முனைவோர் **www.kviconline.gov.in/pmegpeportal** என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட மூன்று திட்டங்களின் கீழ் தேயிலை பதப்படுத்தும் தொழில்கள், அடுமனை உற்பத்தி பொருட்கள் உற்பத்தி, சாக்லேட், உல்லன் ஆடை, சணல் மற்றும் காகித பைகள், ஆயத்த ஆடைகள் தயாரித்தல், கணிணி மென்பொருள், வாசனை எண்ணெய்கள், தைலங்கள் உற்பத்தி, போன்ற உற்பத்தி தொழில்கள், அழகு நிலையம், போட்டோ ஸ்டுடியோ, நகலகம், கேட்டரிங் சர்வீஸ், வாடகை ஆட்டோ, இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுது பார்த்தல், உடற்பயிற்சி நிலையம், இயன்முறை மருத்துவம், போன்ற சேவைத் தொழில்கள் துவங்க சாத்திய கூறுகள் நீலகிரி மாவட்டத்தில் உள்ளன.

மேலும் விரிவான தகவல்களை www.dicnilgiris.com என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். கூடுதல் வழிகாட்டுதலுக்கு 0423-2443947, 98425-65658, 98431-80340 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

ஆகவே, தகுதியும், ஆர்வமும் உள்ள தொழில் முனைவோர்கள் இத்திட்டங்களில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு **மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்.திவ்யா, இ.ஆ.ப.** அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**நீலகிரி**